## பூமித்தாய் வாழ்த்து

பரமாத்மா, தெய்வீகத் தந்தை, தெய்வீகத் தாய்,
என் உயர் ஆன்மா, என் ஆன்மீக வழிகாட்டிகள்,
உதவியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள்,
பூமித்தாயின் பாதுகாவலர்கள்,
பூமித்தாயின் இயற்கை உயிர்கள்,
அனைத்து குணப்படுத்தும் தேவதைகள்,
உயர்கர்ம வாரியம் ஆகியோரிடம்

இறைவா! பூமித்தாயை ஆசீர்வதிக்கும் கருவியாக என்னை செய்யுமாறு தாழ்மையுடன் பிரார்த்திக்கின்றேன். தயவுசெய்து அதற்காக என்னைப்பாதுகாப்பாக வழிநடத்துங்கள்.

நான் நானே தான் (3 முறை)

பூமித்தாயிடம் தெய்வீக ஒளி, தெய்வீக சக்தி, தெய்வீக அறிவு இருக்கட்டும். பூமித்தாயின் ஒற்றுமையை தடுக்கும் அனைத்து எதிர்மறை சக்திகளும், தெய்வீகஒளியால் எரிக்கப்பட்டட்டும். பூமித்தாயிடம் அமைதியும், ஒற்றுமையும் நிலவட்டும்.

பூமித்தாயிடம் ஏராளமான உணவு, நீர் மற்றும் செல்வம் நிறையட்டும். பூமித்தாய் இளமை பெற்று புதுப்பிக்கப்பட்டட்டும்.

அனைத்து உயிர்களிடமும் ஏராளமான அன்பு, இரக்கம், கருணை மற்றும் பரிசுத்தம் நிறையட்டும்.

இறைவனின் வழிகாட்டிகள் பூமித்தாய்க்கு தெய்வீக ஒளி, தெய்வீ சக்தி, தெய்வீக அறிவு கொடுத்து ஆசீர்வதிக்கட்டும்.
இறைவா ! தயவு செய்து அனைவரின் சந்தேகம் மற்றும் பயத்தை நீக்கி, ஒற்றுமையுடன் இருக்கச்செய்யுங்கள்.

இறைவா ! நன்றி ! நன்றி ! நன்றி !


Copyright @ All rights reserved

## வழிபடும் இடத்தை வாழ்த்துதல்

பரமாத்மா, தெய்வீகத் தந்தை, தெய்வீகத் தாய்,
என் உயர் ஆன்மா, என் ஆன்மீக வழிகாட்டிகள்,
உதவியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள்
அனைத்து ஆன்மீக வழிகாட்டிகள், உதவியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், அனைத்து குணப்படுத்தும் தேவதைகள்,
உயர்கர்ம வாரியம், ஆகியோரிடம்

இறைவா! உங்களின் ஆசீர்வதிக்கும் கருவியாக என்னை செய்யுமாறு தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன். தயவுசெய்து அதற்காக என்னை வழிநடத்திக் காப்பாற்றுங்கள்.

நான் நானே தான்.

ஏராளமான தெய்வீக ஒளி இவ்விடத்தில் நிறையட்டும்.
அந்த தெய்வீக ஒளி, தெய்வீக நெருப்பாக மாறி, அனைத்து எதிர்மறை சக்திகளையும் எரித்து ஒளியாக மாற்றட்டும்.
தெய்வீக ஒளி இவ்விடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் வெள்ளமாகப் பாயட்டும்.
இவ்விடத்தில் ஒளி, ஒளி, ஒளி, மற்றும் தெய்வீக ஒளி மட்டும் இருக்கட்டும்.

இவ்விடம் ஏராளமான தெய்வீக அன்பு, தெய்வீக இரக்கம், தெய்வீகக் கருணை, குணப்படுத்தும் சக்தி, ஏராளமான செழிப்பு, நிறைந்த மகிழ்ச்சி, சமாதானம், பரிசுத்தம் மற்றும் தெய்வீகப் பேரானந்தம் ஆகியவற்றால் ஆசீர்வதிக்கப்பட்டட்டும்

தயவுசெய்து அனைவரின் பயம் மற்றும் சந்தேகத்தை நீக்கவும். இங்கு சிகிச்சைக்ககாக வரும் அனைவரும் குணமாகட்டும்.

அனைவரும் தெய்வீக அறிவு மற்றும் தீட்சண்யம் பெறட்டும்.
அனைத்து சோகங்களும் இன்பம் மற்றும் மகிழ்ச்சியால் நிறையட்டும். அனைவரும் செல்வச் செழிப்படையட்டும்.
அனைவரும் பகிர்ந்து கொடுக்க முன்வரட்டும்.
அனைவரிடமும் ஒற்றுமை நிலவட்டும். அனைவரின் இருதயத்திலும் அமைதி, தெய்வீக சமாதானம் மற்றும் ஒற்றுமை இருக்கட்டும்.

இங்கிருக்கும் தெய்வீகச் சக்திகள் தெய்வீக ஒளி, தெய்வீக சக்தி, தெய்வீக அன்பு, தெய்வீகக் கருணை, தெய்வீக இரக்கம், தெய்வீக ஞானம், தெய்வீக அறிவு, பரிசுத்தம் அடைய வாழ்த்துகிறேன்.

இவ்விடத்தின் பாதுகாவலர்கள், தெய்வீக வழிகாட்டுதல், தூய சேவை மற்றும் நேர்மை ஆகியவற்றை அடைய வாழ்த்துகிறேன்.

இறைவா ! நன்றி ! நன்றி ! நன்றி !


Copyright @ All rights reserved

# ஆன்மீக உறுதிமொழி

## நமது ஆன்மீக சக்தியை அதிகரித்து நமது உயர் ஆன்மாவுடன் இணைப்பதற்கான உறுதிமொழி

**www.pranaviolethealing.com**

Copyright @ All rights reserved

## உங்கள் உறக்கத்தில் கற்றுக்கொள்ள பயிற்சி

பரமாத்மா தெய்வீக தந்தை
தெய்வீகத் தாய் என் உயர் ஆன்மா
என் ஆன்மீக வழிகாட்டிகள்
மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரிடம்
இன்று இரவு உறக்கத்தில் என்
சூட்சும உடல் சரியான சூட்சும பள்ளியில்
................................... கற்றுக்
கொள்வதற்கு தேவையான
பாதுகாப்பையும் வழி
நடத்துதலையும் எனக்கு வழங்குங்கள்
நன்றி நன்றி நன்றி

கீழே சௌகர்யமான நிலையில்
கண்களை மூடி படுத்துக் கொண்டு
சுவாசத்தின் கவனத்தை செலுத்தி
ஆழமாகவும் மெதுவாகவும் சுவாசத்தை
உள்ளிழுத்து விடவும். காலையில்
விழித்தெழும் பொழுது இந்த
போதனைக்காக
நன்றி நன்றி நன்றி என்று கூறவும்.

**www.pranaviolethealing.com**


Copyright @ All rights reserved

## உடல் உறுப்புக்கான மன்னிப்பு

உறுப்பின் பெயர்-----வருடங்களுக்கு பிறகு, என் உடலில் நீ எங்கே இருக்கிறாய் என்று அறிந்து கொண்டேன் உறுப்பின் பெயர் நன்றி நன்றி நன்றி

என் உடலில் நீ எங்கே இருக்கிறாய் என நான் தெரிந்து கொள்ளாவிட்டாலும், மிகவும் அக்கறையோடு என்னை கவனித்து கொண்டு வருகிறீர்கள். இரவும் பகலும் எனக்காக மிகவும் கடினமான வேலை செய்து கொண்டு வருகிறீர்கள்

இவ்வளவு வருடங்களாக உனக்கு பிடிக்காதவற்றை எல்லாம் நான் விரும்பி பயன்படுத்தி நிறைய கஷ்டங்களை கொடுத்து விட்டேன். தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்.

இனி அவற்றையெல்லாம் பயன்படுத்த மாட்டேன். அவை யெல்லாம் உனக்கு நல்லது அல்ல என இப்போது தெரிந்து கொண்டேன்.

தயவு செய்து என் வாழ்நாள் முடியும் வரை என்னுடனே இருங்கள். நீங்கள் எனக்கு மிகவும் அவசியம் தேவை- நான் உங்களை நேசிக்கிறேன்.

இன்று முதல் மிகவும் அக்கறையுடன் நல்லமுறையில் உங்களை கவனித்துக் கொள்வேன். எவ்வளவு அதிகமான துன்பத்தை உங்களுக்கு கொடுத்து விட்டேன் என்பதை இப்பொழுது நன்கு அறிவேன்.

என்னை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு மிகவும் நன்றி நன்றி நன்றி



Copyright @ All rights reserved

**நான் தெய்வீக நெருப்பாக இருக்கிறேன்**
**நான் இறைவனின் விருப்பத்திற்கேற்ப**
**தூய்மையாக வாழ்கிறேன்**

**என் ஆன்மா தெய்வீக நெருப்பாக இருக்கிறது.**
**என் ஆன்மா இறைவனின் விருப்பத்திற்கேற்ப**
**தூய்மையாக வாழ்கிறது.**

(3 நிமிடங்கள் அல்லது அதிகமாக தினமும் தேவைக்கேற்ப எத்தனை முறை வேண்டுமானாலும் படிக்கலாம்)

இந்த உறுதிமொழியைப் படிக்கும்போது தெய்வீக நெருப்பு உங்களை வந்து சூழ அனுமதியுங்கள்

(இந்த இரண்டு வரிகளை உங்கள் வீடு, அலுவலகம், ஊர், நகரம், நாடு, கணவன், மனைவி, குழந்தை அல்லது தேவைப்பட்டோர் யாருக்காகவும் படிக்கலாம். எடுத்துக்காட்டாக
என் வீடு தெய்வீக நெருப்பாக இருக்கிறது
என் வீடு இறைவனின் விருப்பதிற்கேற்ப
தூய்மையாக இருக்கிறது)

பூமி, ஆகாயம் மற்றும் கடலில் உள்ள உயிர்கள் அனைத்தும் தெய்வீக நெருப்பாக இருக்கிறது பூமி, ஆகாயம் மற்றும் கடலில் உள்ள உயிர்கள் அனைத்தும் இறைவனின் விருப்பத்திற்கேற்ப தூய்மையாக இருக்கிறது.

பூமி தெய்வீக நெருப்பாக இருக்கிறது.
பூமி இறைவனின் விருப்பத்திற்கேற்ப
தூய்மையாக இருக்கிறது

சந்திரன் தெய்வீக நெருப்பாக இருக்கிறது
சந்திரன் இறைவனின் விருப்பத்திற்கேற்ப
தூய்மையாக இருக்கிறது. (1 நிமிடம்)

சூரியன் தெய்வீக நெருப்பாக இருக்கிறது
சூரியன் இறைவனின் விருப்பத்திற்கேற்ப
தூய்மையாக இருக்கிறது. (1 நிமிடம்)



Copyright @ All rights reserved

## நான்

**நான் இந்த உடல் அல்ல**
**நான் நானே தான்** (7 நொடி அமைதி)

**நான் இந்த தவறான உணர்வு** அல்ல
**நான் நானே தான்** (7 நொடி அமைதி)

**நான் இந்த தவறான எண்ணங்கள்** அல்ல
**நான் நானே தான்** (7 நொடி அமைதி)

**நான் இந்த குழப்பமான மனம்** அல்ல
**நான் நானே தான்** (7 நொடி அமைதி)

நான் ஒரு ஆன்மா.
என் உடல், என் ஆன்மாவின்
ஆலயமாக இருக்கிறது.

நான் தெய்வீகச் சுடர்.
நான் இறைவனின் படைப்பு.
நான் இறைவனுடன் இணைந்து இருக்கிறேன்.

நாளுக்கு நாள், என் கர்மவினைகளை
சரி செய்கிறேன்.

இந்த தெய்வீக வழிகாட்டுதல், மற்றும்
திட்டத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

என் உடல், மனம், மற்றும் ஆன்மா,
இறைவனின் பரிபூரபண படைப்பு.

நான் இறைவனால் நேசிக்கப்படும்
தூய்மையானவன்.

நான் இறைவனின் விருப்பத்திற்கேற்ப
தூய்மையாக இருக்கிறேன்.

**நான் நானே தான்** (3 முறை)

நான் இறைவனோடு இணைந்து இருக்கிறேன்.
நான் எல்லோருடனும் இணைந்து இருக்கிறேன்.



Copyright @ All rights reserved

## நான் ஒளி

நான் ஒளி, பிரகாசிக்கும் ஒளி,
குணப்படுத்தும் ஒளி,
தெய்வீகக் கதிர் வீசும் ஒளி

இறைவன் எனது இருளை அகற்றி,
அதனை ஒளியாக மாற்றிவிட்டார்.

இன்று நான் சூரியனின்,
மையப்பகுதியைப்போல் பிரகாசிக்கின்றேன்.
மனித எண்ணங்களாலும்,
உணர்ச்சிகளாலும், கட்டுப்படுத்த முடியாத
ஜீவ ஊற்றான ஒளி, தெளிந்த ஆறாக
என்னுள் பாய்கிறது.
நான் தெய்வீகத்தின் பிரதிநிதி !

சக்திவாய்ந்த ஒளி ஆறான நான், என்னை
சூழ்ந்துள்ள தீய இருளை விழுங்கிவிட்டேன்.

நான் ஒளி, நான் ஒளி, நான் ஒளி

நான் ஒளியில் வாழ்கிறேன் (3 முறை)

நான் ஒளியின் முழுப்பரிணாமம்.
நான் ஒளியின் தூய்மையான நோக்கம்.

நான் ஒளி, நான் ஒளி, நான் ஒளி

நான் உலகம் முழுவதும்
ஒளி வெள்ளமாகப்பாய்கிறேன்.

இறைவனின் நோக்கத்தை வாழ்த்தி,
உறுதிப்படுத்தி, நான் செல்லும் இடமெல்லாம்
கொண்டு செல்கிறேன்.

நான் ஒளி, நான் ஒளி, நான் ஒளி.



Copyright @ All rights reserved